பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 13 ஞாயிற்றுக்கிழமை 26.01.2025 | அதிர்வு 178

## வெள்ளத்தில் சிக்கி மாயமான இருவரும் சடலங்களாக மீட்பு!

**மட்டக்களப்பில் சோகம்**

மட்டக்களப்பு, வாழைச்சேனை – புலி பாய்ந்தகல் பகுதியில் நேற்று 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## இந்திய மீனவர்கள் 34 பேர் கைது!



(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 34 பேர் இன்று அதி காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். 03

# கைது நடவடிக்கையால் நாம் அஞ்சவேமாட்டோம்



## இப்படி நாமல் கூளுரை

“நாம் எந்தத் தவறும் இழைக்கவில்லை. எமது கரங்களில் இரத்தம் படியவில்லை. எனவே, அரசின் கைது நடவடிக்கையால் நாம் அஞ்சப்போவதில்லை.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சட்டவிரோதமாகச் சொத்து குவித்த விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்ஷ (நாமல் ராஜபக்ஷவின் சகோதரர்) விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தக் கைது தொடர்பில் ஊட கங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். 03

## ரணில் - சஜித் அணிகள் பொதுக் கூட்டணியின் கீழ் ஒன்றிணைய வேண்டும்!

**முன்னாள் அமைச்சர் நவீன் வலியுறுத்து**



ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் பொதுச் சின்னத்தின் கீழ் ஒன்றிணைந்தால் எவ்வித சிக்கலும் வராது என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.

பொதுக் கூட்டணியின் கீழ் ஐக்கிய மக்கள் சக்திக்கு கூடுதல் ஒதுக்கீடுகளை வழங்க முடியும் என்றும், இரு தரப்பும் இணங்கக்கூடிய செயலாளர் ஒருவரை நியமித்தால் முன்னோக்கிப் பயணிக்க லாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், இரு தரப்பினரையும் ஒன்றிணைக்கும் பணிகளைப் பெப்ர வரி 10 ஆம் திகதிக்குள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



## அரசியல் பழிவாங்கலில் அரசு ஈடுபடவில்லை!

**அமைச்சர் நளிந்த தெரிவிப்பு**

அநுர அரசு அரசியல் பழிவாங் கல் நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஊழல், மோசடிகளில் 03



# நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் ஊடாகவே எம்மை நாம் வளர்த்துக்கொள்ள முடியும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு





"கால மாற்றத்துக்கு ஏற்ப நவீன தொழில்நுட்பங்களை உள்வாங்கிக் கொள்வதன் ஊடாகவே எம்மை நாம் வளர்த்துக் கொள்ளலாம். அதற்கு ஏற்ப வடக்கு மாகாண பல் மருத்துவர்கள் சங்கம் எடுத்துள்ள நடவடிக்கை வரவேற்கத்தக்கது."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பல் மருத்துவர்கள் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடல் திண்ணை விடுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'பாதிக்கப்பட்ட எமது மக்களுக்காகப் பணியாற்றுகின்றோம் என்ற உணர்வு அனைவரிடமும் இருக்க வேண்டும். இன்று அந்த உணர்வு மங்கிச் செல்கின்றமை வேதனையானது.

மக்களுக்குப் பணியாற்றுபவர்களில் பலர் எதிர்மறையான சிந்தனையுடன் இருக்கின்றனர். மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதில் பின்னடிக்கின்றனர். இந்த நிலைமை மாறவேண்டும்.

இன்று பல் மருத்துவ சங்கத்தினர், தமது தொழிற்துறையை மேம்படுத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ள இவ்வாறான கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெறவேண்டும்.

இவ்வாறான கலந்துரையாடல்கள் ஊடாக எம்மை மேம்படுத்துவதன் ஊடாக எமது மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்." – என்றார்.



# மூன்று பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!

## 29 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்

காலி – அக்குரஸ்ஸ பிரதான வீதியில் அங்குலுகஹ பகுதியில் இன்று காலை 3 பஸ்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளானதில் 29 பேர் காயமடைந்துள்ளனர்.

காலியிலிருந்து இமதுவ நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று பஸ் தரிப்பிடத்தில் நிறுத்துவதற்கு முற்பட்ட வேளையில் எதிர்த்திசையில் பிரவேசித்த பஸ் ஒன்று குறித்த பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதன்போது, காலியிலிருந்து இமதுவ நோக்கிப் பயணித்த பஸ்ஸின் பின்புறமாக மற்றுமொரு பஸ் மோதியுள்ளது.

சம்பவத்தில் 3 பஸ்களிலும் பயணித்த 29 பயணிகள் காயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக இமதுவ மற்றும் கராப்பிட்டிய ஆகிய வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இமதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சீரற்ற காலநிலையால் கிழக்கே அதிகம் பாதிப்பு

## 56 ஆயிரத்து 878 பேர் அவதி

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 18 மாவட்டங்களில் 27 ஆயிரத்து 751 குடும்பங்களைச் சேர்ந்த 92 ஆயிரத்து 471 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் 17 ஆயிரத்து 952 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 878 பேர் பலத்த மழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் 7 ஆயிரத்து 970 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 299 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே வடமத்திய மாகாணத்தில் 1,369 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 599 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக 319 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

7 மாகாணங்களில் 142 குடும்பங்களைச் சேர்ந்த 438 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், 320 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிக மழை காரணமாக நாட்டிலுள்ள 73 பிரதான நீர்த்தேக்கங்களில் 35 நீர்த்தேக்கங்கள் தொடர்ந்தும் நிரம்பி வழிகின்றன என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீரியல் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் பொறியாளர் எல். எஸ். சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வெள்ளத்தில்...

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல்போயிருந்த இருவர் இன்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி இருவரும் நேற்று மாலை அந்தப் பகுதியிலுள்ள பாலமொன்றைக் கடப்பதற்கு முற்பட்ட வேளையில், ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இந்தநிலையில், காணாமல்போயிருந்த குறித்த இருவரும் இன்று சடலங்களாக மீட்கப்பட்டனர்.

சந்திவெளி பகுதியைச் சேர்ந்த 52 மற்றும் 71 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்தனர் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

### இந்திய மீனவர்கள்...

தமிழகம் – இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 34 இந்திய மீனவர்கள் மூன்று படகுகளில் கிளிநொச்சி கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடியில் ஈடுபட்ட சமயமே கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 34 பேரும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் இன்று காலை ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

### கைது...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“சனிக்கிழமையன்றுகூட பொலிஸார் தற்போது தீயாக வேலை செய்கின்றனர் போலும். நல்லது. எம்மைக் கைது செய்வதில் காட்டும் ஆர்வத்தை, பாதாளக் குழுக்களை ஒடுக்குவதிலும் பொலிஸார் காட்ட வேண்டும். மாறாக அரசியல் தேவைகளுக்காகச் சட்டத்தை அமுல்படுத்த முற்படக்கூடாது.

அநுர அரசு அடக்குமுறையை கையில் எடுத்துள்ளது. நல்லாட்சிக் காலத்தில் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் செயலாளராக இருந்தவரே தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்றார்.

தமது இயலாமையை மூடிமறைப்பதற்காகவே அவ்வப்போது கைதுகள் இடம்பெறுகின்றன.

நாம் எந்தத் தவறும் இழைக்கவில்லை. எமது கரங்களில் இரத்தம் படியவில்லை. எனவே, அரசின் கைது நடவடிக்கையால் நாம் அஞ்சப்போவதில்லை. நீதிமன்றத்தை நம்புகின்றோம். நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குரிய பிரசாரம் எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும்.” – என்றார்.

### அரசியல்...

ஈடுபட்டவர்கள் கடந்த காலங்களில் பைல்களை மறைத்திருந்தனர். அவற்றை மீள விசாரணைக்கு உட்படுத்தி எடுப்பதற்கு சிறிது காலம் செல்லும்.

சில விடயங்களுக்காகப் பிணை கிடைத்தாலும் வழக்கு விசாரணை தொடரும். பொலிஸார் உரிய வகையில் செயற்படுவார்கள் என நாம் நம்புகின்றோம். பொலிஸாருக்குரிய ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும்.

சிலர் கூறுவதுபோல் அநுர அரசு அரசியல் பழிவாங்கலில் ஈடுபடவில்லை. நடைபெற்றுள்ள சம்பவங்கள் தொடர்பில்தான் விசாரணைகள் முன்னோக்கிச் செல்கின்றன.” – என்றார்.

# யாழில் இந்தியக் குடியரசுத் தின நிகழ்வு



(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவின் 76 ஆவது குடியரசுத் தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூ தரகத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன

யாழ்ப்பாணம், மருதடி வீதியில் உள்ள யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தில் துணைத் தூதுவர் சாய் முரளி இந்தியாவின் தேசியக் கொடியை எற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து இந்திய ஜனாதிபதியின் குடியரசு தின வாழ்த் துச் செய்தி வாசிக்கப்பட்டது.

இதன்போது இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் கலை, கலசார நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் துணைத் தூது வர் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள், இந்திய மற்றும் இலங்கை மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது நிர்வாகத் தவறு!

நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் நுகர்வோர் விலைச் சுட்டெண்களில் ஏற்படும் அதிகரிப்பின் அல்லது மாற்றத்தின் நூற்று வீதமே அக்காலப் பகுதிக்கான பணவீக்க விகிதம் எனப்படுகின்றது.

அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள், கட்டணங்கள், பெறுமதிகளில் ஏற்படும் சராசரிகளின் மாற்றத்தின் அடிப்படையில் நாட்டின் பணவீக்க விகிதம் கணிக்கப்படுகின்றது. பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரிக்கும் போது பண வீக்கம் எகிறுகின்றது. நாட்டின் நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைதல் உட்பட பாதகமான பல தொடர் விளைவுகளை அது ஏற்படுத்தும்.

பொருளாதார நெருக்கடி மிக உச்சமாக இருந்த 2022 இல் நாட்டின் பண வீக்கம் சராசரியாக 52 வீதம் என்ற அளவுக்கு - உச்சத்திற்கு - அதிகரித்து இருந்தது. அதன் பாதமான விளைவுகளை நாடு அப்போது எதிர்கொண்டது.

ஆயினும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியை ஏற்று, பொருளாதார நெருக்கடிகளை முகங்கொண்டு சமாளிக்கும் நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியமையை யடுத்து 2023 இல் பணவீக்க விகிதம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது.

2023 இல் அது ஆக ஆறு வீத அதிகரிப்பை மட்டுமே வெளிப்படுத்தியது. 2024 இல் நிலைமை மேலும் சீரடைய பணவீக்கம் மேலும் குறைந்து, சுமார் ஐந்து வீதமாகப் பதிவாகியது.

சனத்தொகை மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களமும் மனிதநேய சேவைகள் மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களமும் இவ்விடயங்களை ஒட்டி சமர்ப்பித்த அறிக்கைகளின்படி, நாட்டின் பணவீக்கப் போக்குகள் பற்றிய விரிவான பகுப்பாய்வு ஒன்றை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மனிதநேய சேவைகள் மற்றும் புள்ளி விவரவியல் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் வசந்த அத்துகோரள தந்துள்ளார்.

அதன்படி -

2024 ஆம் ஆண்டிற்கான மாதாந்திர பணவீக்கத் தரவுகள் மேலும் நுணுக்கமான விடயங்களை வெளிப்படுத்துகின்றன. மார்ச் மாதத்தில் பண வீக்க விகிதம் 1.9 வீதமாகவும், ஏப்ரல் மாதம் -0.8 வீதமாகவும், மே மாதம் -0.06 வீதமாகவும் அது குறைந்துள்ளது. ஜூன் மாதத்தில் பணவீக்கம் சற்று நேர்மறையாக 0.08 வீதமாக இருந்தது, ஆனால் ஜூலை முதல் நவம்பர் வரை தொடர்ந்து ஐந்து மாதங்களுக்கு எதிர்மறையாக இருந்தது. குறிப்பிடத்தக்க வகையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2024 நவம்பரில் 1.02 வீதமாக சாதகமான மாதாந்த பண வீக்க வீதத்தைப் பதிவு செய்துள்ளது.

தேசிய நுகர்வோர் விலைக் குறியீடும் இதேபோன்ற போக்குகளைப் பிரதிபலித்தது. 2024 இல் எட்டு மாதங்களுக்கு எதிர்மறையான மாதப் பணவீக்கமே பதிவாகியுள்ளது. இது பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் படிப்படியாக பொருளாதார நெருக்கடிக் குறைவைக் குறிக்கிறது.

எவ்வாறாயினும், பணவீக்க விகிதம் இத்தகைய கீழ்நோக்கிய போக்கைக் காட்டிய போதிலும், பணவீக்கத்தின் இந்த வீழ்ச்சி பொது மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பில் குறிப்பிடத்தக்க சரிவைத் தரவேயில்லை. பல அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வுப் போக்கில் மாற்றம் ஏற்படாத நிலையில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தொடர்ந்தும் கடுமையான இன்னல்களை எதிர்கொள்வதாக பேராசிரியர் அத்துகோரள சுட்டுகின்றார்.

பணவீக்க விகிதம் சரிவைக் கண்டும் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றங்கள் தொடருகின்றன என்றால் ஆட்சி நிர்வாகத்தில் தவறு இருக்கின்றது என்றுதான் அர்த்தம்.





# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் ஊழியருக்கான தலைமைத்துவப் பயிற்சி

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஊழியர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி பட்டறையானது விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ற் நிறுவனத்தால் ஐந்து நாள்கள் நடத்தப்பட்டது.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மற்றும் அதன் யாழ்ப்பாண கிளையில் சேவையாற்றும் மருத்துவத்துறை, நிர்வாகத்துறை மற்றும் கணக்குத்துறையைச் சார்ந்த 30 ஊழியர்கள் தலைமைத்துவம் சார்ந்த பங்கேற்றல் முறை செயற்பாடுகள் வழியில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

சுயவிழிப்புணர்வு, தன்னம்பிக்கையை கட்டியெழுப்புதல், தலைமைத்துவம், ஒத்துணர்வு, குழுச்செயற்பாடு, தொடர்பாடல், திட்டமிடல், நேர முகாமைத்துவம், பிரச்சினைகளைத் தீர்த்தல், தீர்மானம் எடுத்தல், மன அழுத்தத்தைக் கையாளுதல், உணர்வுகளைக் கையாளுதல், படைப்பாற்றல் திறன், முரண்பாடு முகாமைத்துவம் மற்றும் இலக்கு நிர்ணயித்தல் போன்ற திறன்சார் அமர்வுகள் பயிற்சி பட்டறையில் செயற்பாட்டு முறையில் மேற்கொள்ளப்பட்டன.

மகிழ்ச்சியூட்டும் மற்றும் ஆர்வமூட்டும் செயற்பாடுகள் வாயிலான இந்தப் பயிற்சியில் பயிலுனர்கள் அனைவரும் தங்களது தலைமைத்துவம் சார்ந்த துலங்கல்களைச் சிறப்பாக வெளிப்படுத்தி இருந்தனர்.

ஊழியர்களின் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்காகவும் நிறுவனத்தின் அபிவிருத்தி நோக்கியும் மற்றும் ஊழியர்கள் அனைவரும் ஒருமித்த கருத்துடனும் குழுப்பிணைப்புடனும் பயணிப்பதற்காகவும் பயிலுனர்கள் வைத்தியசாலையின் நலனுக்கான செயற்றிட்டங்களை உருவாக்கி, வைத்தியசாலையின் நிதி அனுசரணையில் எதிர்வரும் ஒரு மாத காலப் பகுதியில் அமுலாக்கம் செய்ய உள்ளனர்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட இந்த பயிற்சி பட்டறையில், விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர் தெய்வேந்திரராஜா, பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் மயூரன் ஆகியோர் பிரதம வளவாளர்களாகவும் விசன்ஸ் நிறுவனத்தின் மூன்று பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஏனைய வளவாளர்களாகவும் செயற்பட்டு பயிற்சியை முன்னெடுத்திருந்தனர்.



# அரசால் முஸ்லிம் மக்கள் தொடர்ந்தும் புறக்கணிப்பு!

## இம்ரான் எம்.பி. விசனம் தெரிவிப்பு

(அபு அலா )

அரசு அடுத்தடுத்து முஸ்லிம்களை புறக்கணித்து வருகின்ற போதிலும் அரசிலுள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்துக் கவனம் செலுத்தாது மௌனமாக இருப்பது முஸ்லிம் சமுகத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசால் முன்னெடுக்கப்படும் முஸ்லிம்கள் புறக்கணிப்பு விடயத்தில் தற்போது உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நியமனம் பேசுபொருளாகியுள்ளது. சிரேஷ்டத்துவ அடிப்படையில் முன்னிலையில் இருந்த ஒருவரை விடுத்து புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் ஊடகங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.



விடப்பட்டவர் முஸ்லிம். இவர் முஸ்லிம் என்ற காரணத்துக்காக விடப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டுள்ளது. நீதித்துறை நியமனங்களில் கூட முஸ்லிம் சமுகத்துக்கு நீதியில்லை என்றால் இந்த அரசில் முஸ்லிம்கள் எப்படி நியாயமான செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியும்.

இந்த அரசில் முஸ்லிம்கள் அடுத்தடுத்துப் பறக்கணிக்கப்படுகின்ற போதிலும் அரசிலுள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவை குறித்து இதுவரை எதுவும் பேசாது மௌனம் காப்பது முஸ்லிம் சமுகத்தில் பெருங் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அரசு ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டம் குறித்து இப்போது பேசுகின்றது. அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்குதல் மற்றும் ஏற்றாத்தாழ்வுகளை ஒழித்தல் என இந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசின் இதுபோன்ற புறக்கணிப்புச் செயற்பாடுகளைப் பார்க்கும் போது எங்கே சம உரிமை உள்ளது. எப்படி ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க முடியும் என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது.

எந்தத் திட்டமும் கடதாசியில் இருக்கலாம். அது வாசிப்பதற்கு திருப்தியாகத் தான் இருக்கும். நடைமுறையில் அது இல்லை என்றால் அதனால் என்ன பயன் ஏற்படும் என்பதையும் கேட்க விரும்புகிறேன்.

எனவே, இந்த அரசும் கோத்தாபாயவின் முஸ்லிம் விரோத வழியில் பயணிக்கிறதா என்ற சந்தேகமே இப்போது அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது.- என்றார்.





# கல்முனையில் குருதிக்கொடை!

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று (25) மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது.ய

கல்முனை ஆதாரவைத்தியசாலையுடன் இணைந்து பாடசாலை வளாகத்தில் இந்த இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

ஆரம்ப வைபவம் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் நடராஜா றமேஸ் மற்றும் விசேட அதிதியாக வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பாளர் மருத்துவர் திருமதி பி.எம்.கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கார்மேல் பற்றிமாவின் 125 ஆவது நிறைவு நிகழ்வு நிறைவேற்றுக் குழுவினரும் இதில் கலந்து கொண்டனர்.










# மீசாலை நாவலர் முன்பள்ளி ஆண்டு விழா நிகழ்வுகள்

(த.சுபேசன்)

தென்மராட்சி, மீசாலை நாவலர் முன்பள்ளியின் ஆண்டு விழா நிகழ்வுகள் மீசாலை திருப்புகழ் மண்டபத்தில் இடம்பெற்றன.

நாவலர் முன்பள்ளி ஆசிரியர் ஜெ.தேவகி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இடைக் குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் தி.அபராஜிதனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப் பாளர் ம.இராஜலட்சுமியும், கௌரவ விருந்தினராக முன்பள்ளி இணைப்பா ளர் திருமதி செ.ஆனந்தி மற்றும் நாவ லர் முன்பள்ளி தாபகர் செல்வி கு.இரா ஜலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களுடைய கலை நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்பு ஆகியன இடம்பெற்றிருந்தன.



### மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின்

# மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு அரச அதிபர் தலைமையில் கலந்தாய்வு





(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்த கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை (24) காலை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் ராமகிருஷ்ணன் , பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச தனியார் போக்குவரத்துச் சங்க பிரதி நிதிகள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி இடம் பெறவுள்ள மகா சிவராத்திரி விழாவுக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கடந்த வருடங்களை போன்று இம்முறையும் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள உள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், உணவு, பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளடங்களாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து விடையங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.



# பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகள், சப்பாத்துகள்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

சர்வதேச மனித உரிமைகள் மற்றும் உலகலாவிய பணியின் அமைப்பு ஊடாக பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகள் மற்றும் சப்பாத்துக்கள் நேற்று (25) திருகோணமலையில் உள்ள ஜுப்லி மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வானது அதன் கிழக்கு மாகாண நிர்வாக சபை பணிப்பாளர் யேசுதாசன் ரொகான்ராஜ் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது சுமார் 150 மாணவர்களுக்கு பாடசாலை உபகர ணங்கள் வழங்கப்பட்டன.

வாழும் போது வாழ்த்துவோம் என்ற தொனிப்பொருளின் கீழ் பல சமூக சிவில் செயற்பாட்டாளர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். குறித்த அமைப்பின் உறுப்பினர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன் புதிய அங்கத்தவர்களும் இணைத்துக் கொள் எப்பட்டனர்.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன, திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# நிந்தவூர் ஆதார வைத்தியசாலை தாதியர் இடமாற்றம் தொடர்பில் மக்கள் போராட்டம்

## உரிய விசாரணை நடத்துமாறும் கோரிக்கை





(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர்ஆதாரவைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பை உரிய முறையில் மேற்கொள்ளாமை தொடர்பில் கேள்வியெழுப்பிய சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் உமர் அலிக்கு இடமாற்றம் வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் உரிய விசாரணைகளை பக்கச்சார்பின்றி நடத்துமாறு கோரி பொதுமக்கள் நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலையின் முன்பாக ஒன்று கூடிய மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பி உரிய விசாரணைகள் பக்கச்சார்பின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குரல் கொடுத்த சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் இடமாற்றம் குறித்து மீள்பரிசீலனை வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் முஹமட் இஸ்மாயில் உமர் அலிக்கு இடமாற்றம் வழங்கியமை கண்டிக்கத்தக்கது எனவும் இவ்விடயம் குறித்து நீதியான விசாரணைகளை மேற்கொண்டு தீர்வினைப் பெற்றுக்க கொடுக்குமாறும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் எம்.பி. சுகாதார அமைச்சரை நாடாளுமன்றத்தில் வைத்து கேட்டுக் கொண்டார்.





# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டம் முன்னெடுத்தனர் முப்படையினர்

(ஹஸ்பர் ஏ.எச்.)

புதிய அரசின் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டத்தின் கீழ் திருகோணமலை கடற்கரை பகுதி வெள்ளியன்று (24) சுத்தம் செய்யப்பட்டது.

இந்தத் திட்டத்தை திருகோணமலை நகரசபை மற்றும் முப்படையினர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது திருகோணமலை கடற்கரை மற்றும் அதனை அண்மித்த பகுதியில் உள்ள பிளாஸ்டிக் உட்பட குப்பைகளை அகற்றிச் சுத்தம் செய்தனர்.

அதிகளவான உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தரும் நிலையில் இந்தத் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை வரவேற்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் திருகோணமலை நகரசபை ஊழியர்கள், முப்படையினர் என பலரும் கலந்து கொண்டனர்.

### பொதுத்தேர்லில் தமிழ், முஸ்லிம் வாக்குகளைப் பெற்ற ஆளும் கட்சி

# தமிழ், முஸ்லிம் சமூகங்களை புறக்கணிக்கும் செயற்பாடுகள் கவலைக்குரியவை ஆகும்!

### அம்பாறை மாவட்ட எம்.பி. உதுமாலெப்பை தெரிவிப்பு



(கே. ஏ. ஹமீட் )

நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 12 லட்சம் தமிழ், முஸ்லிம் மக்கள் ஆளும் கட்சிக்கு வாக்களித்துள்ளனர். ஆளும் கட்சிக்கு பெரும் தொகையான தமிழ், முஸ்லிம் மக்கள் வாக்களித்தமைக்கு பிரதான காரணம் உள்ளது. முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோத்தபாய ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது ஊமைகளாகச் செயற்பட்டனர்.

இந்தவேளையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமதாஸ, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுத்தீன் ஆகியோர் முஸ்லிம்களின் ஜனாஸா எரிக்கப்பட்ட விடயத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். எனினும் முஸ்லிம் மக்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு மௌனமாக இருந்த அனைவரும் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் தோல்வி அடைந்துள்ளனர். நாடாளுமன்றத்தில் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தெரிவு செய்யப்பட்டு ‘கிளீன் ஸ்ரீலங்கா’ முஸ்லிம் காங்கிரஸ் கட்சியாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டம் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவில் 18 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நமது நாட்டின் சுதந்திரத்துக்காக ஒத்துழைப்பு வழங்கிய தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதிகள் நியமிக்கப்படாத நிலையை மாற்றியமைத்துத் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற உயர் நீதியரசர்கள் நியமனத்தில் முஸ்லிம் சமூகத்துக்குப் பாரபட்சம் ஏற்பட்டுள்ளமை குறித்து முஸ்லிம் சமூகம் கவலை அடைந்துள்ளது. முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட நீதியரசர் லாபார் புறக்கணிக்கப்பட்டுள்ளார். நீதித் துறை நியாயமாக செயற்பட வேண்டும். புதிய அரசின் அமைச்சரவையில் இதுவரையும் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படாத நிலை தொடர்கிறது. ஆளும் கட்சிக்கு வாக்களித்த முஸ்லிம்கள் எங்களிடம் இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பேசுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

முஸ்லிம் ஒருவரை அமைச்சரவையில் நியமிக்குமாறு எமது முஸ்லிம் சமூகம் கோரிக்கை விடுப்பதை ஆளும் கட்சியினர் வேறு விதமாக விமர்சனம் செய்ய வேண்டாம். முஸ்லிம் ஒருவரை அமைச்சரவையில் நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்த போது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களில் தகுதி உள்ளவர்கள் இல்லை என்று ஆளும் கட்சியினர் கூறியதாக கேள்விப்பட்டோம். அமைச்சரவையில் பிரதி சபாநாயகர் டாக்டர் றிஸ்வி சாலியை நியமியுங்கள் அல்லது பிரதி அமைச்சர் ஒருவரை நியமியுங்கள் என்று எமது சமூகம் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா காலத்தில் எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் பெயர்ப் பட்டியலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றவூப் ஹக்கிம் கோரிக்கை விடுத்த போதும் இதுவரையும் எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் பெயர்ப் பட்டியலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏன் ஆளும் கட்சியினர் தயக்கம் காட்டுகின்றனர். எனவே கொரோனா காலத்தில் எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்களின் விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சவூதி அரசால் அம்பாறை மாவட்டத்தில் நுரைச்சோலையில் 1000 கோடி ரூபா நிதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத்திட்டம் இதுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப் படவில்லை.

20 வருடங்களாக சுனாமியால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச மக்கள் வீடுகளின்றி சிரமப்படுகின்றனர். அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்த சவூதி அரேபியா நாட்டின் தூதுவர் இந்த வீட்டுத் திட்டத்தை மக்களிடம் கையளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடமும் சவூதி தூதுவர் வீடுகளை மக்களிடம் கையளிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். எனவே அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வாழும் சனத் தொகைக்கு ஏற்ப இந்த வீடுகளை மக்களுக்குக் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.- என்றார்.



# பாடசாலை மத்தியஸ்தம் தொடர்பில் மாணவர்களுக்குச் செயலமர்வுகள்

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மத்தியஸ்தம் தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் மத்தியஸ்த ஆணைக்குழுவின் பங்களிப்புடன் பெரிய நீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எஸ்.கோகுல்ராஜ் வரவேற்புரை நிகழ்த்தி இந்தச் செயலமர்வை ஆரம்பித்து வைத்தார். அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலையில் இருந்து சுமார் 50 இற்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது செயலமர்வில் மத்தியஸ்த சபை உத்தியோகத்தர்களான அருள் பிரசாந்தன், எஸ்.றிஸ்மினா ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வானது மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் எஸ்.றிஸ்மினா ஏனைய மத்தியஸ்த உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் நடைபெற்றது.

இதன்போது பாடசாலை மத்தியஸ்தம், மத்தியஸ்த



வரலாறு, முரண்பாட்டு தீர்வின் முக்கியத்துவம் தொடர்பாடல் கலந்துரையாடல் என்பன இடம்பெற்றன.

மத்தியஸ்த படிமுறைகள், பாடசாலை மத்தியஸ்தத்தில் ஆசிரியர்களின் பங்கு என்பன தொடர்பில் இதன்போது ஆசிரியர்களுக்குத் தெளிவூட்டப்பட்டது.





# படைப்புழுவின் தாக்கத்தால் சோளச் செய்கையில் பாதிப்பு

## கிண்ணியாவில் செய்கையாளர்கள் விசனம்

(எச் எம் ஹலால்தீன் )

அண்மையில் - நாட்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக படைப் புழுவின் தாக்கம் சோளச் செய்கையை பாதித்துள்ளது என்று செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட உப்பாறு கிராம சேவகர் பிரிவில் உள்ள சோலைவெட்டுவான், மயிலப்பஞ்சேனை முதலான பகுதிகளில் இந்த நிலைமை காணப்படுகின்றது.

இந்தப் பகுதிகளில் சுமார் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் படைப் புழுத் தாக்கத்தால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

படைப்புழு தாக்கத்துக்கு தகுந்த எண்ணெய் அடித்தும் சரியாகவில்லை என்றும் இந்தப் புழுத் தாக்கத்தால் சோளம் விளையவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டள்ளது என்று செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.





# 76 ஆவது குடியரசு தினம் கொண்டாட்டம் தேசிய கொடி ஏற்றினார் திரவுபதி முர்மு

இந்தியாவின் 76 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு, தலைநகர் டில்லியில் உள்ள கடமைப் பாதையில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தேசியக்கொடியை ஏற்றி, பாதுகாப்புப் படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

நாடு முழுவதும் 76 ஆவது குடியரசு தினம் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களிலும் தலைவர்கள் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினர். தலைநகர் டில்லியில் காலை 10.30 மணி அளவில் குடியரசு தினவிழா தொடங்கியது. இதற்காக கடமைப் பாதைக்கு வந்த குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, சிறப்பு விருந்தினரான இந்தோனேஷிய ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோ ஆகியோரை, பிரதமர் நரேந்திர மோடி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, அமித் ஷா உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், முப்படை தளபதிகள், இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

21 குண்டுகள் முழங்க தேசியக் கொடியை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு ஏற்றினார். இதையடுத்து, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அனைவரும் எழுந்து நின்று தேசியக் கொடிக்கும் தேசிய கீதத்துக்கும் மரியாதை செலுத்தினர். அப்போது, 4 இராணுவ ஹெலிக்கொப்டர்கள் மூலம் மலர்கள் தூவப்பட்டன.

இதையடுத்து இராணுவ அணிவகுப்பு நடத்தப்பட்டது. இராணுவம், கடற்படை, விமானப்படை உள்பட பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகள் குழுக்களாக அணிவகுத்து வந்து குடியரசுத் தலைவருக்கு மரியாதை செலுத்தினர். இதையடுத்து, நாட்டின் இராணுவ வலிமையை பறைசாற்றும் இராணுவ வாகன அணிவகுப்பு நடத்தப்பட்டது. பல்வேறு நவீன ரக வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தின.

இதையடுத்து, பல்வேறு மாநிலங்களின் அலங்கார வாகனங்களின் அணிவகுப்பு நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, பல்வேறு மாநிலங்களின் கலாச்சார நடனங்கள் நடைபெற்றன.

முன்னதாக, குடியரசு தின கொண்டாட்டங்களின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த துணிச்சலான வீரர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி தேசிய போர் நினைவுச்சின்னத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் கலந்து கொண்டார். இராணுவ அதிகாரிகள் பலரும் மரியாதையுடன் வணக்கம் செலுத்தினர். இதனையடுத்து, இரண்டு நிமிட மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.



# அரசமைப்பைப் போற்றுவோம்; ஸ்டாலின் குடியரசு தின வாழ்த்து

இந்தியாவின் 76 ஆவது குடியரசு நாளையொட்டி முற்போக்கான, அனைவரையும் உள்ளடக்கிய, கனிவான இந்தியாவைக் கட்டமைக்க வேண்டிய நம் கூட்டுக் கடமையினை இந்நாள் நமக்கு நினைவூட்டட்டும் என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“இந்தியாவின் 76 ஆவது குடியரசு நாளில், அனைவருக்கும் நீதி, சமத்துவம், மாண்பு ஆகியவற்றை உறுதி செய்யும் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் அடித்தளத்தைப் போற்றுவோம்.

முற்போக்கான, அனைவரையும் உள்ளடக்கிய, கனிவான இந்தியாவைக் கட்டமைக்க வேண்டிய நம் கூட்டுக் கடமையினை இந்நாள் நமக்கு நினைவூட்டட்டும். அனைவருக்கும் நம்பிக்கையும் நல்நோக்கமும் நிறைந்த குடியரசு நாள் வாழ்த்துகள்.”என்று குறிப்பிட்டுள்ளார்.





# சூடானில் மருத்துவமனை மீது ட்ரோன் தாக்குதல்; 67 பேர் பலி

ஆபிரிக்கா - சூடானில் மருத்துவமனை மீது நடத்தப்பட்ட ஆளில்லா விமான தாக்குதலில் 67 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆபிரிக்காவின் சூடான் நாட்டில் இராணுவம் மற்றும் துணை இராணுவத்திற்கு இடையே நீண்ட காலமாக தொடர்ந்து வரும் அதிகார போராட்டம், நாட்டின் அமைதி மற்றும் பொது மக்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதித்து வருகிறது.

இந்த உள்நாட்டுக் கலவரத்தினால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள் ளதுடன் மேலும் பல்லாயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகிறனர்.

இந்நிலையில், சூடானின் டார்பூர் பகுதியில் உள்ள எல்-பஷாரில் செயல்பட்டு வந்த மருத்துவமனை ஒன்றில் ஆளில்லா விமானம் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் 67 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்ததுடன் மேலும் 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மருத்துவமனை போன்ற பாதுகாக்கப்பட வேண்டிய இடத்தை தாக்குவது மனிதநேயத்திற்கு எதிரான செயலாகும் இந்த கொடூர செயலுக்கு உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அத்துடன், மனிதாபிமான உதவிகளை வழங்கும் மருத்துவமனைகளைத் தாக்குவது போர் குற்றமாகும் என்று பல நாடுகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# நாடுகளுக்கான நிதியுதவிகளையும் இடைநிறுத்த அமெரிக்கா திட்டம்

சர்வதேச நாடுகளுக்கான அனைத்து நிதியுதவிகளையும் இடைநிறுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க அதிகாரிகள் வெளிநாடுகளிலுள்ள அமெரிக்க தூதரகங்களுக்கு அனுப்பிய இரகசிய கடிதத்தை மேற்கோள் காட்டி பி.பி.சி. இதனை குறிப்பிட்டுள்ளது.

திட்டங்களை மதிப்பாய்வு செய்த பிறகு வெளியுறவுத்துறை செயலாளர் தீர்மானம் மேற்கொள்ளும் வரை புதிய நிதியுதவிகளும் நிறுத்தி வைக்கப்படும் என்று பி.பி.சி. அறிக்கை கூறுகிறது.

2023 ஆம் ஆண்டில் மாத்திரம் அமெரிக்கா சர்வதேச நாடுகளுக்கு 68 பில்லியன் டொலர் நிதியுதவி வழங்கியதாக குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளிநாட்டு மேம்பாட்டு உதவியை 90 நாள்களுக்கு நிறுத்தி வைக்கும் நிர்வாக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.

இஸ்ரேல் மற்றும் எகிப்துக்கான அவசர உணவுத் திட்டங்கள், இராணுவ உதவிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் சூடான் உள்ளிட்ட நாடுகளுக்கு உணவு வழங்குவதற்கான திட்டத்துக்கும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

எவ்வாறாயினும் உக்ரைனுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக தகவல் இல்லை.



பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 26/01/2025

## ரொறன்ரோவில் இடம்பெற்ற தீ விபத்தில் மூவர் காயம்

றெறான்ரோவின் பார்க்டேல் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

குயின்ஸ் மற்றும் ஜேம்சன் வீதிகளுக்கு அருகாமை 02▶



# ஒன்றாரியோ மாகாணத்தில் இடைத்தேர்தல் சாத்தியம்

**கனடாவின் பிரதான மாகாணங்களில் ஒன்றான ஒன்றாரியோ மாகாணத்தில் இடைத்தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.**

**முதல்வர் டக் போர்ட் தலைமையிலான அரசாங்கம் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு திட்டமிட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

எதிர்வரும் வாரத்தில் தேர்தல் தொடர்பில் முதல்வர் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒன்றாரியோ மாகாணத்தில் தேர்தல் நடத்தப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறு எனினும் மாகாண அரசாங்கம் முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி கனடா மீது வரி விதிப்பதாக அறிவித்துள்ள நிலையில் மக்களின் ஆணையை பெற்றுக் கொள்வதற்காக இந்த தேர்தலுக்கு செல்ல முதல்வர் டக் போர்ட் தலைமையிலான அரசாங்கம் திட்டமிட்டு உள்ளதாக கட்சி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கனடாவின் எரிபொருள் தேவையில்லை: ட்ரம்ப்

கனடாவின் எரிபொருள் தேவையில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் எண்ணெய், எரிவாயு, வாகனங்கள் போன்ற எதுவுமே தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவுடன் செயல்படுவது மிகுந்த சவால் மிக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மாநாட்டில்



காணொலி தொழில்நுட்பம் மூலம் பங்கேற்று உரையாற்றிய போது இதனை தெரிவித்துள்ளார்.

எங்களது கார்களை கனடியர்கள் உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவை விடவும் உலகில் ஏனைய நாடுகளை விடவும் அமெரிக்காவிடம் கூடுதல் எண்ணிக்கையில் எரிபொருள்கள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

25 வீத வரியிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் அமெரிக்காவுடன் கனடா இணைந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்யத் தவறினால் வரி விதிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.




# துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது

கனடாவின் மிஸிஸாகா பகுதியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பீல் பிராந்திய பொலிஸார் மேற்படி நபரை கைது செய்துள்ளார்னர்.

துப்பாக்கிச் சூடு இடம் பெற்றதாக கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

பாடசாலை ஒன்றுக்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சில மணி நேர போராட்டத்தின் பின்னர் மேற்படி நபரை பாதுகாப்பான முறையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் படுகாயம் அடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபருக்கு உயிர் ஆபத்து கிடையாது என வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தீ விபத்தில் இருந்து தப்பிப்பதற்கு மாடியிலிருந்து குதித்த பெண் காயம்



கனடாவில் தீ விபத்திலிருந்து தப்பிப்பதற்காக மாடியில் இருந்து கீழே குதித்த பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மிஸிஸாக பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. வீட்டின் இரண்டாம் மாடியில் ஜன்னல் வழியாக மேற்படி பெண் குதித்துள்ளார்.

தீ விபத்தில் சிக்கியிருந்த பெண் உயிரை காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில் இவ்வாறு குதித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

வீட்டின் கீழ் பகுதியிலிருந்து தீ பரவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் அவருக்கு உயிர் ஆபத்து கிடையாது எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த தீபத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

பீல் பிராந்திய பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## றொறன்ரோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனவும் அவருக்கு உயிராபத்து கிடையாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இரண்டு பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீயணைப்புப் படையினர் விரைவில் தீயைக் கட்டுப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீ விபத்திற்கான காரணங்கள் கண்டறியப்படவில்லை, சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





# கனடாவுக்குச் சென்ற இந்திய பெண் மாயம்

கனடாவுக்குக் கல்வி கற்கச் சென்ற இந்திய இளம்பெண் ஒருவரை 10 நாள்களாக காணவில்லை.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சந்தீப் கெளர் என்னும் இளம்பெண், கல்வி கற்பதற்காக கனடாவுக்கு சென்றுள்ளார்.

நிலத்தை விற்று சந்தீப் கௌரை கனடாவுக்குக் கல்வி கற்பதற்காக அனுப்பி வைத்தார்கள் அவளது பெற்றோர்.

சந்தீப் கௌரும் நல்லபடியாக தனது படிப்பை முடித்துவிட்டார். ஒரு நல்ல வேலையில் சேர்ந்து பெற்றோரின் கடனை அடைத்து, குடும்பத்தை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவருவதாக உறுதியும் அளித்திருந்தார் அவர்.

ஆனால், ஜனவரி மாதம் 15 ஆம் திகதி முதல் சந்தீப் கௌரைக் காண வில்லை.

தனது தோழியுடன் கடற்கரைக்குச் சென்ற சந்தீப் கெளர், புகைப்படம் எடுத்துக்கொண்டிருக்கும்போது கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால், அதிகாரிகளின் இந்த விளக்கத்தால் திருப்தி அடையாத சந்தீப் கெளரின் பெற்றோர், தங்கள் மகள் காணாமல் போனது தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொள்ள வேண்டும் என கோரியுள்ளார்கள்.




# கனடாவில் குப்பை வண்டியில் மோதுண்டு பெண் உயிரிழப்பு

மிஸ்ஸிசாகா பகுதியில் குப்பை வண்டி ஒன்றில் மோதி பெண்ணொருவர் கொல்லப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எக்லிங்டன் மற்றும் எரின் மில்ஸ் வீதிகளுக்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் வீதியை கடந்து செல்லும் போது குப்பை லொறி மோதுண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகன விபத்தில் பலத்த காயமடைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தினை மேற்கொண்ட சாரதி விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.